200

புன்செய் புளியம்பட்டி நகராட்சி
கட்டிட அனுமதி உத்தரவு

க.வி.எண். 59/2018/எப்1 நாள். 05.12.2018
க.அ.எண். 57/2018/ எப்1

பொருள் : கட்டிட அனுமதி புன்செய் புளியம்பட்டி நகராட்சி, கிராமம் புன்செய் புளியம்பட்டி, சர்வே எண்.291/3A, 291/3B, 291/4A2, 291/4B மற்றும் 290/1C– ல் உள்ள 14938 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் கட்டிடம் கட்டிட அனுமதி வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை : 1. திரு.ராஜா மற்றும் நால்வரது 09.05.2018ம் தேதிய பள்ளிக் கட்டிட விண்ணப்பம்.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.7546/2018/சேம -3 நாள்.10.09.2018.

********

| S.No | Build Floor Name | Usage Name | Build up Sqm |
|---|---|---|---|
| 1. | Stilt Floor | School | 2234.49 |
| 2. | First Floor | School | 2151.28 |
| 3. | Second Floor | School | 2151.28 |
| 4. | Stair Case Room | School | 139.83 |
| | | Total Sqm | 6676.88 |

செலுத்தப்பட்ட கட்டணங்களின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | கட்டணம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கட்டிட விண்ணப்ப கட்டணம் | 100.00 |
| 2. | பரிசீலனைக் கட்டணம் | 4800.00 |
| 3. | மழை நீர் சேகரிப்பு முன் வைப்புத் தொகை | 25000.00 |
| 4. | அபிவிருத்திக் கட்டணம் | 74700.00 |
| 5. | கட்டிட உரிமையாணைக் கட்டணம் | 238900.00 |
| | Total Amount | 343500.00 |

| Receipt no | Receipt date | Amount | Payment Mode |
|---|---|---|---|
| 060/01/01/18-19/0002076 | 09.05.2018 | 343500.00 | Cash |

| Fees Discription | DD/Challan No | DD/Challan Date | Amount |
|---|---|---|---|
| Labour Welfare Fund | 557174 | 28.11.2018 | 431220.00 |

உத்தரவு :

1920-ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 200, 201-வது பிரிவின் கீழ் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமம் புன்செய் புளியம்பட்டி , சர்வே எண். 291/3A, 291/3B, 291/4A2, 291/4B மற்றும் 290/1C உள்ள இடத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம். ந.க.எண்.7546/2018/சேம-3 நாள்.10.09.2018-ன்படி புதிய பள்ளி உபயோக கட்டிடம் 6676.88 ச.மீ பரப்பளவில் கட்டிடம் கட்டிக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனையின் பேரில் மனை மற்றும் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

கட்டிடம் கட்ட குறித்த இடத்தில் கட்டிடத்தை வரைபடத்தில் வரைந்துள்ளபடி கீழ்கண்ட கட்டுப்பாடுகளுக்கு 05.12.2018 தேதியில் இருந்து 04.12.2021 தேதிக்குள் கட்டிக்கொள்ள உரிமை ஆணை வழங்கப்படுகிறது.

THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue,
Punjai Puliampatti,
Erode - Dist, PIN - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90927 71044

ஆணையாளர்
புன்செய் புளியம்பட்டி நகராட்சி

5/12/18

THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue,
Punjai Puliampatti,
Erode - Dist, PIN - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90927 7104

பெறுபவர்

திரு.R.ராஜா மற்றும் நால்வர்,
310 – 2, புதிய பூமி ( தபோவானம் எதிரில்),
எரங்காட்டுப்பாளையம்,
காரப்பாடி அஞ்சல்.
புன்செய்ப் புளியம்பட்டி - 638459.

நகல் : நகரமைப்பு ஆய்வர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை தெரிவிக்க

நகல் : வருவாய் ஆய்வாளர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் கட்டிடத்திற்கு வரிவிதித்து வரிவிதிப்பு எண்ணை தெரிவிக்க

நகல் : வருவாய் பிரிவு எழுத்தர்

இணைப்பு : நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களின் 10.09.2018 -ஆம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகள்.

| CONDITIONS/நிபந்தனைகள் | |
|---|---|
| S.NO | CONDITION NAME |
| 1 | இந்த அனுமதி 3 வருட காலத்திற்கு மட்டும் அமுலில் இருக்கும். இந்த கால அளவிற்குள் கட்டிடம் கட்டி முடிக்கபடவில்லையானால் புதியதாக மனு செய்து உரிமக் கட்டணம் செலுத்தி அனுமதி பெறப்பட வேண்டும். |
| 2 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படி கட்டிடம் கட்டப்பட வேண்டும். |
| 3 | ஆணையாளரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதி பெறாமல் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து எந்தவிதமான மாறுதலும் செய்யக் கூடாது. |
| 4 | அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்களை கட்டிட வேலைகள் நடக்கும் இடத்தில் வைத்திருந்து நகராட்சி/மாநகராட்சி ஆய்வு அலுவலர்கள் கேட்கும் போது காண்பிக்கப்பட வேண்டும். |
| 5 | பொதுத் தெருவை ஒட்டிக் கட்டப்படும் மதில் சுவர்களின் உயரம், தெரு மட்டத்திலிருந்து 5/8 அடிக்கு மேற்படக் கூடாது. கதவுகள் தெருப் பக்கம் திறக்கப்படக் கூடாது. தெருக்களின் சந்திப்பிலுள்ள முனைகள் வளைவுபடுத்த வேண்டும். |
| 6 | சாலை ஓரங்களில் ஆக்கிரமிப்பு செய்தல் கூடாது. மனுதாரரின் மனைக்கு செல்வதற்காக கட்டப்படும் படிகள் அவர்கள் சொந்த இடத்திலேயே கட்டப்பட வேண்டும். |
| 7 | அரசு அல்லது நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் எந்த ஆக்கரமிப்பும் செய்தல் கூடாது. |
| 8 | அரசாணை எண் 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் 03.11.2004ன் படி செப்டிக் டேங்கில் 'U' Trap அமைக்கப்பட வேண்டும். |
| 9 | கிணற்றை சுற்றிலும் 3 அடி உயரத்திக்கு குறையாமல் கைப்பிடிச் சுவர் கட்டப்படுவதுடன் கிணற்றை சுற்றி தளவரிசை கட்டப்பட வேண்டும். |
| 10 | ஜன்னல்களின் அளவுகள் அதன் பிரேம்கள் நீங்கலாக இருக்க வேண்டும். |
| 11 | கழிவுநீரைப் வெளிப்படுத்த தேவையான வடிகால் வசதிகள் கட்டப்படுவதுடன் தண்ணீர் தங்காமல் தடுக்கப்பட வேண்டும். |
| 12 | சமையலறையில் புகையினை வெளியேற்றும் விசிறி (Exhaust Fan) அமைக்கப்பட வேண்டும். |
| 13 | நகராட்சி/மாநகராட்சி துப்பரவு அலுவலர்/ஆய்வரிடமிருந்து துப்புரவு சான்றிதழ் பெறு முன்னர் கட்டிடத்தை பயன்படுத்துதல் கூடாது. |
| 14 | கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதி அல்லது கட்டிடம் பயன்படுத்துகிற தேதி ஆகியவற்றில் எது முன்கூட்டி நடந்ததோ அந்த தேதியை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட அல்லது கட்டிடம் பயன்படுத்தபட்ட தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் முடிக்கப்பட்ட கட்டிடத்தின் இரண்டு வரைப்படங்களுடன் நிர்வாக அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும். |
| 15 | மழைநீர் சேகரிப்பு திட்டம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை (நிலை) எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11.10.2002ன்படி அமைக்கப்பட வேண்டும். |
| 16 | வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம். |
| 17 | கட்டிடம் கட்டப்படும் இடத்தின் முன்புறம் கட்டிட உரிமையாளர் பெயர் கட்டிட அனுமதி எண், அனுமதி வழங்கிய தேதி அனுமதிக்கப்பட்டுள்ள காலம் அனுமதி நீடிப்பு காலம் கட்டிடம் கட்டும் ஒப்பந்ததாரர் பெயர் ஆகிய விபரங்களை வெள்ளை நிற எழுத்தால் எழுதி வைக்கப்பட வேண்டும். |
| 18 | அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறுதல் செய்து கட்டப்படும் கட்டிடங்களுக்கு / அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு மாநகராட்சி சட்டப்பிரிவு 283ன்படி அரையாண்டு ஒன்றுக்கு 100 சதுர அடிக்கு ரூ. 50 வீதம் வசூலிக்கப்படத்தக்கதாகும். |
| 19 | அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தில் கண்டுள்ளவாறு தான் கட்டிடம் கட்டப்பட வேண்டும். மாறுதலாகவும், விதிகளுக்கு முரணாகவும் கட்டும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்க இயலாது. மேலும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57 ன் கீழ் கட்டிடத்தினை பூட்டி சீல் வைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue,
Punjai Puliampatti,
Erode - Dist, PIN - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90927 71044

THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue,
Punjai Puliampatti,
Erode - Dist, PIN - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90927 71044

| | |
|---|---|
| 20 | அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்களுக்கு மாறுதல் செய்ய அவசியம் எனில் அதற்கு திருத்திய வரைப்படங்கள் அனுப்பி புது உத்திரவு பெற்ற பின்னரே கட்டிட வேலை ஆரம்பிக்க வேண்டும். இதில் தவறியவர்கள் மீது மாநகராட்சி சட்டப்பிரிவு 447ன்படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் அல்லது மாநகராட்சி சட்டப்பிரிவு 296ன்படி மாநகராட்சி பணியாளர்களால் இடித்து தள்ளப்படும். |
| 21 | ஏற்கனவே உள்ள வீடுகள் மாற்றி கட்டுவதற்கு முன் மின் இணைப்புகள் இருப்பின் அதை அப்புறப்படுத்த வேண்டும். |
| 22 | கட்டிட சம்மந்தப்பட்ட கல், மண் முதலியவற்றை தெருவில் போடக்கூடாது. |
| 23 | கட்டிடப்பணி நடைபெறும் பொழுது பணி செய்யும் வேலையாட்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பாதுகாப்பு குறித்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மனுதாரர் சொந்த பொறுப்பில் மேற்கொள்ள வேண்டும். |
| 24 | கட்டுமானப் பொருட்கள் தரம், கட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு பணி மேற்கொள்ளும் பொறியாளரும் கட்டிட உரிமையாளரும் பொறுப்பாவார்கள். |
| 25 | இணைப்பில் கண்டுள்ளவாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.7546/2018/சேம–3, நாள்.10.09.2018ல் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள், பொது நிபந்தனைகள் பொருந்தும். |

அனுப்புநர்
திரு. இரா. வாழவந்தான், பி.இ.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
சேலம் மண்டலம்,
6, சன்னதி தெரு, சுப்ரமணியநகர்,
சூரமங்கலம் ,சேலம் – 636 005.
Telephone No:0427– 2448625 ,
e mail : ddslmregion@gmail.com

பெறுநர்
ஆணையாளர்,
புஞ்சைபுளியம்பட்டி நகராட்சி,
ஈரோடு மாவட்டம்.

ந.க.எண். 7546/2018 சேம–3, நாள். 10.09.2018.

அய்யா,

பொருள்: பள்ளிக் கட்டிடம் – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் – சேலம் மண்டலம் – ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலம் வட்டம் – புஞ்சை புளியம்பட்டி நகராட்சி/கிராமம் – ச.எண். 291/3ஏ, 3பி, 4ஏ2, 4பி மற்றும் 390/1சி–ல் 14938.00 ச.மீ பரப்பில் அமையும் இடத்தில் Springdale Public School உத்தேச பள்ளிக் கட்டிடம் அமையும் மனையிடத்திற்கு மனையிட ஒப்புதலும் மற்றும் இசைவும் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. ஆணையாளர், புஞ்சை புளியம்பட்டி நகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.468/2018/எப்1, நாள். .05.2018.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 17.07.2018.
3. மனுதாரர் கடிதம் நாள் 07.09.2018.
4. அரசாணை எண். 86, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (புடி4) துறை, நாள். 28.03.2012.
5. அரசாணை எண். 161, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 26.06.2013.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 20/2013/பிஏ1. நாள். 11.07.2013.
7. அரசாணை எண். 79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 04.05.2017.
8. அரசாணை எண். 135, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 21.07.2017.
9. வேளாண்மை இணை இயக்குநர், ஈரோடு மாவட்டம் அவர்களின் கடிதம் எண். அ4/4453/2018(7) நாள் 22.06.2018.
10. சத்தியமங்கலம் தீயணைப்பு மீட்புப் பணிகள் நிலைய அலுவலர் தடையின்மைச் சான்று ந.க.எண்.170/V/2018, நாள். 09.05.2018.
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/2017/Spl.Cell, நாள். 28.09.2017.
12. அரசாணை எண்.53, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (புடி. 4.3), நாள். 16.04.2018.

--------

பார்வை 1–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசங்கள் பரிசீலிக்கப்பட்டு நாமக்கல் மாவட்டம், ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், புஞ்சை புளியம்பட்டி நகராட்சி/கிராமம், ச.எண். 291/3ஏ, 3பி, 4ஏ2, 4பி மற்றும் 390/1சி–ல் 14938.00 ச.மீ பரப்பில் அமையும் இடத்தில் Springdale Public School உத்தேச பள்ளிக் கட்டிடம் அமையும் மனையிடத்திற்கு ‘ AG ’ என எல்லையிட்டும், அம்மனையில் அமையும் OSR திறவிடத்திற்கு abcd என எல்லையிட்டும், ம.வ./ம(சே) எண். 798/2018 என எண்ணிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச பள்ளிக் கட்டிட வரைபடத்திற்கு க.வ./நஊதுஇ(சே) எண்.50A, 50B, 50C/2018 எண்ணிட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொதுவான நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

<u>மனையின் பரப்பு</u> – 14.938.00 <u>ச.மீ.</u>

<u>உத்தேச பள்ளிக் கட்டுமானப் பரப்பு விபரம்</u>

| | | |
|---|---|---|
| தரைதளம் | – | 2234.49 ச.மீ. |
| முதல் தளம் | – | 2151.28 ச.மீ. |
| இரண்டாம் தளம் | – | 2151.28 ச.மீ. |
| மாடிப்படி அறை | – | 139.83 ச.மீ. |
| மொத்தம் | – | 6676.88 ச.மீ |

THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue,
Punjai Puliampatti,
Erode - Dist, PIN - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90927 71044



THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue,
Punjai Puliampatti,
Erode - Dist, PIN - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90927 71044

சிறப்பு நிபந்தனைகள்

1) "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

2) பார்வை 5 மற்றும் 6–ல் கண்ட அரசாணை மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி கல்வி நிறுவனங்களில் திறந்தவெளி ஒதுக்கீடு தேவைப்படும் கட்டிடங்களை பொறுத்தவரை கட்டிட வரைபடத்தில் திறவெளி ஒதுக்கீடு காண்பித்தல் வேண்டும் எனவும், அதன்படி திறவெளி ஒதுக்கீடு பூங்காவாக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் எனவும், விளையாட்டு மைதானமாக பயன்படுத்தக் கூடாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்காண் பொருள் சம்பந்தமாக, அரசாணை வெளியிடப்பட்ட நாளான 26.06.2013–க்கு பின்னர் இசைவு அளிக்கப்படுவதால் மனைபிட பரப்பின் 10.21 % பரப்பான 1527.473 ச.மீ. பரப்பு கொண்ட இடத்தினை OSR–ஆக திறவெளி ஒதுக்கீடு பூங்கா "a to d" என வரைபடத்தில் குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளவாறு உள்ள இடத்தினை அதற்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3) கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Set backs), வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

4) கட்டிடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

5) பார்வை 10–ல் கண்டுள்ள துறைகளின் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

இதனை உள்ளாட்சி கண்காணித்து அதன் பின்பு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

பொது நிபந்தனைகள்

1. உத்தேச கட்டுமானத்திற்கு Solar Water Heater System அமைக்கப்பட வேண்டும்.

2. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

3. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்திற்கு எந்தவித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

4. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும் அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002–ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

5. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளிவேறும் கழிவுநீர், தனியார் வாகனங்கள் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.

6. Site Plan–ல் காட்டப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் நிலை நிறுத்தப்பட வேண்டும்.

7. உத்தேச கட்டுமானத்திற்கு தேவையான அளவிற்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

8. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.1), நாள். 03.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைக்கப்பட வேண்டும்.

9. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிக்கையின்படி உத்தேச கட்டிடத்தின் "FLY Ash Bricks" மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

10. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது உத்தேச இடத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. பிற்காலத்தில் தேவைப்படும் பட்சத்தில் விரிவு அபிவிருத்தித் திட்ட சாலைகள் விஸ்தரிப்புக்கான நிலத்தை மனுதாரர் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

12. மனையில் அமையும் குடிநீர் மே.நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்படல் வேண்டும்.

13. இக்கட்டிடத்தில் அவசரகால வெளியேறும் வழிகள் பொது கட்டிட விதிகள் 1972-ன்படி அமைக்கப்பட வேண்டும்.

14. இக்கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்து மனுதாரரும் சம்மந்தப்பட்ட பொறியாளரும் முழுப்பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

1. பார்வை 11-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any polot, apartment or building, as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority".

2. பார்வை 12-ல் சுட்டிய அரசாணையின்படி கீழ்க்காணும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

i. The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney Holder and any other Person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall not put the building to use without obtaining Completion Certificate from The Deputy Director of Town & Country Planning, Salem Region, Salem.

ii. a) The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney holder and any other person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall submit the application along with the plan showing the Site Boundary, dimension of the building and the setback on all around and the plan must be authenticated by the applicant and Architect/Structural Engineer/Licensed Surveyor for the issue of Construction Continuance Certificate (CCC).

b) Also, the Applicant/Builder/Promoter/Power of Attorney holder and any other person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall submit application along with a drawing / plan showing the actual construction made at site when the construction is completed without any requirement of further civil works for the issue of Completion Certificate (CC)

iii. The Applicant/Owner/Builder/Promoter/Power of Attorney holder and any other person who is acquiring interest on the property for which Technical Clearance is issued, shall comply and other conditions/directions stipulated in the operational guidelines issued/subsequently to be issued by the DTCP.

THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue,
Punjai Puliampatti,
Erode - Dist, PIN - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90927 71044

THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue,
Punjai Puliampatti,
Erode - Dist, PIN - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90927 71044

...4

உள்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதிகள் கட்டணம் முழுமையாக பார்வை 5-ல் கண்ட அரசாணையின்படி மனுதாரரால் பார்வை 3-ல் கண்ட கடிதம் மூலம் செலுத்தப்பட்டு விபரம் பெறப்பட்டுள்ளது.

பார்வை 8-ல் சுட்டிய அரசாணையின்படி உத்தேச பள்ளிக் கட்டிடத்தின் மொத்த பரப்பில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணத் தொகையில் 75% Shelter Fund கட்டணம் மனுதாரரால் நீதிமன்ற உத்தரவு பெறப்பட்ட பின்னர் அதன்படி செலுத்துவதாக குறித்த வழக்கு நிலுவையில் உள்ளதால் உறுதிமொழிக் கடிதம் ரூ.100/-க்கான முத்திரைத் தாளில் (BR429628) வழங்கியதன் அடிப்படையில் இவ்வொப்புதல் வழங்கப்படுகிறது.

பார்வை 7-ல் சுட்டிய அரசாணையின்படி மனைப்பரப்பிற்கு 3% மார்க்கெட் Value கட்டணம் உரிய கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் உள்ளாட்சியால் வசூல் செய்த பின்னரே உத்தேச பள்ளிக் கட்டிடத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

<u>கணக்குத் தலைப்பு :</u>

0217 Urban Development
60 Other urban development schemes
800 Other Receipts
AS Receipts under Land use conversion charges
(DPC : 0217-60-800-AS-0005)

உள்ளாட்சி நடைமுறைகளுக்கு உட்பட்டு உரிய உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி ஆணையாளர், புஞ்சைபுளியம்பட்டி நகராட்சி அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக ஆணையாளர், புஞ்சைபுளியம்பட்டி நகராட்சி அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு ஆணையாளர், புஞ்சைபுளியம்பட்டி நகராட்சி அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
சேலம் மண்டலம், சேலம்.


<u>இணைப்பு,</u>
ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள்
2 தொகுப்புகள்.

<u>நகல்:</u>
திரு. ஆர். ராஜா மற்றும் 4 பேர்,
தபோவனம் எதிரில்,
எரங்காட்டுப்பாளையம்,
காரப்பாடி அஞ்சல்,
புஞ்சைபுளியம்பட்டி,
ஈரோடு 638 459.
} பத்தி ஒன்று மட்டும்.

(208)

THE BUILDING PLAN SHOWING THE PROPOSED ... BUILDING FOR SPRINGDALE PUBLIC SCHOOL AT ... FLOOR, FIRST FLOOR & SECOND FLOOR BUILDING FOR SPRINGDALE PUBLIC SCHOOL AT THANNIERPANTHAL TO KOVILPUTHUR ROAD IN S.F.No:-291/3A, 291/3B, 291/4A2, 291/4B & 290/1C PUNJAI PULIYAMPATTY VILLAGE & MUNICIPALITY, SATHYAMANGALAM TALUK, ERODE Dt.

OWNER & APPLICANT NAME:-
1)THIRU:- R.RAJA,
2)TMT :- S.SUJA,
3)THIRU:-P.KUMAR,
4)THIRU:-S.GURUSAMY
5)THIRU:-A.RAMESHKUMAR.




## AREA OF DETAILS

| | |
|---|---|
| TOTAL SITE | :-14,938.00 SQ.M |
| R.C.C ROOF BUILDING | |
| GROUND FLOOR R.C.C | :- 2234.49 SQ.M |
| FIRST FLOOR R.C.C | :- 2151.28 SQ.M |
| SECOND FLOOR R.C.C | :- 2151.28 SQ.M |
| R.C.C HEAD ROOM 4No | :- 139.83 SQ.M |
| OPEN SPACE | :- 12703.51 SQ.M |

FLOOR SPACE INDEX(FSI):- 6,676.88 / 14,938.00 =0.44

PLOT COVERAGE:-2,234.49 / 14,938.00 X 100 =14.96 %

O.S.R:- REQ :-1493.80 SQ.M,
PROVIDE:-1527.47 SQ.M (10.23%)

NOTE:-
1) ALL DIMENSION ARE IN METER.
2) CAR PARKING 58 No PROVIDED.
3) P.H CAR PARKING 2No:- PROVIDED

SITE BOUNDARY
PROPOSED CONSTRUCTION
EXISTING ROAD
DRIVEWAY

DRAWING No:-3/ 7 /2016 / SHEET No:-3

Shri Ram Builder, 98430-25380
23,Kabliar Street, 97886-21742
Palaniappa Complex
Saravana Theatre Compound, Gobi.

APPLICANT'S SIGNATURE

M. PREETHI KANJALI. B.Arch
REGISTERED ARCHITECT
CA / 2016 / 85987
SALEM

ARCHITECHT

K.R. KESAVAN, M.E.(Struc.)
CIVIL & STRUCTURAL CONSULTANT
Opp. Saradha College, Valu Complex
SALEM - 636 016.

STRUCTURAL ENGINEER

Er. M. VISWANATHAN DCE, & LBS.
Civil Engineer & Building Contractor
SHRI RAM BUILDER
23, Kabliar Street, Sri Palaniappa Complex
Saravana Theatre Compound, Gobi

ENGINEER SIGNATURE


SITE PLAN
SCALE 1 CM = 4 M

THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue,
Punjai Puliampatti,
Erode - Dist, Pin - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90927 71044




THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue,
Punjai Puliampatti,
Erode - Dist, PIN - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90027 71044

THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue,
Punjai Puliampatti,
Erode - Dist, PIN - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90027 71044




THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue
Punjai Puliampatti,
Erode - Dist, PIN - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90927 71044

THE CORRESPONDENT
SPRINGDALE PUBLIC SCHOOL
# 291/4-B, Springdale Avenue,
Punjai Puliampatti,
Erode - Dist, PIN - 638 459.
Web:springdalecbse.com / Phone: 90927 71044